Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/23.12.2025/Script.

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—நாராயணசாமி

தேதி 23.12.2025 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

பொருளாதாரத்தில், முதலீடுகள் மற்றும் வளர்ச்சியைத் தூண்ட, பாதுகாப்பு மிக அவசியம் என்று, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார்.

இந்தியா-நியுசிலாந்து வரியில்லா வர்த்தக ஒப்பந்தம், முற்றிலும் பெண்கள் மட்டுமே அடங்கிய பேச்சுவார்த்தைக் குழுவினரால் இறுதி செய்யப் பட்டுள்ளதை, பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டி உள்ளார்.

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், போலி மருந்து விவகாரம் குறித்து, சிபிஐ மற்றும் என்ஐஏ விசாரணைக்குப் பரிந்துரை செய்துள்ளார்.

புதுச்சேரியில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாதாந்திர உதவித் தொகை உயர்த்தி வழங்கப்படும் என, முதலமைச்சர் திரு ரங்கசாமி அறிவித்துள்ளார்.

முர்மு

பொருளாதாரத்தில், முதலீடுகள் மற்றும் வளர்ச்சியைத் தூண்ட, பாதுகாப்பு மிக அவசியம் என்று, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார். இன்டெலிஜென்ஸ் பீரோ-புலனாய்வுப் பிரிவு சார்பில் புதுடெல்லியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், ஐபி அறக்கட்டளை சொற்பொழிவாற்றிய அவர், நாடு பல திசைகளில் இருந்து பாதுகாப்பு

தொடர்பான பல்வேறு சவால்களை சந்திப்பதாக கூறினார். குடியரசு தலைவரின் உரை குறித்து கூடுதல் விவரங்கள்............

(வாய்ஸ்)

நாட்டில், தீவிரவாதம், எல்லைப்புறப் பதற்றம், வகுப்புவாத வன்முறை போன்ற பிரச்சனைகளுக்கு அப்பாற்பட்டு, அண்மைக் காலங்களில் சைபர் குற்றங்களாலும், பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக குடியரசு தலைவர் தெரிவித்தார். சமூக ஊடகங்களின் தாக்கம் அதிகரித்து வரும் நடப்புக் காலத்தில் பொய்ச் செய்திகளில் இருந்து மக்களை பாதுகாப்பதே, மிகப் பெரிய சவால் என்றும், சமூக ஊடகத்தில் உண்மைகளை மட்டுமே பேசக் கூடிய சமூகம் ஒன்றை உருவாக்குதல் அவசியம் என்றும், அவர் வலியுறுத்தினார்.

நாட்டின் உள்நாட்டுப் பாதுகாப்பை உறுதிப் படுத்துவதில், உளவுப் பிரிவின் பங்களிப்புகளை, குடியரசு தலைவர், வெகுவாகப் பாராட்டினார். கடந்த 10 ஆண்டுகளில் உளவுப் பிரிவு போன்ற பாதுகாப்பு அமைப்புகள், உள்நாட்டு அளவிலான பல அச்சுறுத்தல்களை, நசுக்கி இருப்பதாகவும், இத்தகைய முயற்சிகளில் மக்களின் பங்கேற்பும் மிக முக்கியம் என்பது குறித்து, விழிப்புணர்வைப் பரப்புதல் அவசியம் என்றும், அவர் வலியுறுத்தினார்.

குடியரசு தலைவரின் சொற்பொழிவு நிகழ்ச்சியில், மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, உள்துறைச் செயலர் திரு கோவிந்த் மோகன், உளவுப் பிரிவு இயக்குநர் திரு தபன்குமார் டேக்கா உட்பட பலர், கலந்து கொண்டனர்.

மோடி-கட்டுரை

இந்தியாவிற்கும்-நியுசிலாந்துக்கும் இடையிலான வரியில்லா வர்த்தக ஒப்பந்தம், முற்றிலும் பெண்கள் மட்டுமே அடங்கிய பேச்சுவார்த்தைக் குழுவினரால் இறுதி செய்யப்பட்டு, வரலாற்று முக்கியத் துவம் பெற்றுள்ளதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். இதுகுறித்து மத்திய தொழில்-வர்த்தக அமைச்சர் திரு பியூஷ் கோயல் எழுதியுள்ள கட்டுரை ஒன்றை, அவர் சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொண்டு, இந்தியாவின் வரியில்லா வர்த்தக ஒப்பந்தங்கள், வரிக் குறைப்புக்கு

அப்பாற்பட்டு, **பொருளாதாரத்தை வலுப்படுத்தி மக்களின் வாழ்வை வளப்படுத்தவும்,** உதவிகரமாக இருக்கும் என்று கூறி உள்ளார். பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையின் கீழ், ஏழாவதாக இறுதி செய்யப்பட்டுள்ள இந்த **வரியில்லா வர்த்தக** உடன்பாடு, உலக அளவிலான **வர்த்தகக் கூட்டாண்மை** மூலம் இந்தியாவின் வளர்ச்சியை வலுப்படுத்துவதில், அரசுக்குள்ள **உறுதிப்பாட்டின், வெளிப்பாடு** என்று, அமைச்சர் திரு பியூஷ்கோயல், தமது கட்டுரையில் கூறி உள்ளார்.

*மோடி-சரண்சிங்*

இன்று, முன்னாள் பிரதமர் **சவுத்ரி சரண்சிங்** பிறந்த நாளை ஒட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி, அன்னாருக்கு புகழாரம் சூட்டி உள்ளார். சமுதாயத்தில் வாய்ப்புகள் பறிக்கப்பட்ட பிரிவினரின் நலனுக்கும், வேளாண் வளர்ச்சி மற்றும் விவசாயிகள் நலனுக்கும் வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டவர், சரண்சிங் என்று, சமூக ஊடகப் பதிவு ஒன்றில், பிரதமர் கூறி உள்ளார். இன்று சவுத்ரி சரண்சிங் பிறந்த நாள், **தேசிய விவசாயிகள் தின**மாகவும் கொண்டாடப் படுவதை ஒட்டி, மத்திய வேளாண் அமைச்சர் திரு ஷிவ்ராஜ் சிங் சவ்கான், உணவுத் துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி உள்ளிட்டோர், நாட்டிற்கே உணவு வழங்கும் விவசாயிகளுக்கு, **நன்றி கலந்த வாழ்த்து** தெரிவித்துள்ளனர். நாட்டிற்கான விவசாயிகளின் முக்கிய பங்களிப்புகளை அங்கீகரிக்கும் வகையில், விவசாயிகளின் நலனுக்கான பிஎம் கிசான் திட்டம், பயிர்க் காப்பீட்டு திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை, மத்திய அரசு அமல்படுத்தி வருவதும் குறிப்பிடத் தக்கது.

*நாகேஸ்வரன்*

நாட்டின் **மொத்த உள்நாட்டு உற்பத்தி** குறித்து அரசு வெளியிடும் புள்ளி விவரங்களுக்கு எதிரான விமர்சனங்கள், உரிய பகுப்பாய்வு இன்றி, **வேண்டுமென்றே சந்தேகத்தை விதைக்கும்** நோக்குடன் வெளியிடப்படுவதாக, மத்திய அரசின் பொருளாதார ஆலோசகர் திரு அனந்தநாகேஸ்வரன் கூறி உள்ளார். மொத்த உள்நாட்டு உற்பத்தி உள்ளிட்ட முக்கியக் குறியீடுகளை மாற்றுவது குறித்து புதுடெல்லியில் இன்று நடைபெற்ற பயிலரங்கில் அவர் பேசுகையில் தற்போது மாற்றங்கள்

மிக வேகமாக நிகழ்வதால், பொருளாதார குறியீடுகளுக்கான அடிப்படைகளை அவ்வப்போது மாற்றுதல் அவசியம் என்றார். நிதி ஆயோக் துணைத் தலைவர் திரு சுமன் பேரி இந்நிகழ்ச்சியில் பேசுகையில் மக்களுக்கு அரசு வழங்கும் புள்ளி விவரங்களை, தொழில்முறை ரீதியிலான பொதுக் கருத்து அடிப்படையில் கணக்கிடுதல் அவசியம் என்றார்.

இஸ்ரோ

இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகத்தின், வர்த்தகப் பிரிவான, நியூ ஸ்பேஸ் நிறுவனம், நாளை ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து, LVM-3 ராக்கெட் மூலம், BlueBird Block-2 தொலைத்தொடர்பு செயற்கைக் கோளை, விண்ணில் செலுத்த இருக்கிறது. அமெரிக்காவின் AST ஸ்பேஸ்மொபைல் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டுள்ள இந்த செயற்கைக்கோள், விண்வெளியில் இருந்து மொபைல் தொலைபேசிகளுக்கு, நேரடி BroadBand இணைப்பு வழங்க உதவிகரமாக இருக்கும் என்றும், குறிப்பாக, இதுவரை இத்தகைய வசதி இல்லாத தொலைதூரப் பகுதிகள், இதனால் பயன்பெறும் என்றும், இஸ்ரோ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அவசரகால தொலைத்தொடர்பு தேவைகளுக்கும் பயன்தரக் கூடிய இந்த செயற்கைக் கோள், வர்த்தக ரீதியில் செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்துவதில், இந்தியாவின் திறன்களை, உலகிற்கு வெளிப்படுத்துவதாக அமையும் என்பதும் குறிப்பிடத் தக்கது.

போலி-மருந்து

புதுச்சேரியில் தயாரிக்கப்பட்ட போலி மருந்துகள் பல மாநிலங்களில் விற்பனை செய்யப்பட்டதாக, சிபி-சிஐடி விசாரணையில் தெரிய வந்திருப்பதன் அடிப்படையில் இதுகுறித்து சிபிஐ மற்றும் தேசிய புலனாய்வு முகமை மூலமான விசாரணைக்கு துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் பரிந்துரை செய்துள்ளார். பிரச்சனை குறித்து பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகள் சிபிஐ விசாரணை கோரியுள்ள நிலையில் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த நபர்களுக்கு இதில் தொடர்பு இருப்பதாக தெரிய வந்திருப்பதால் தேசிய அளவிலான விசாரணை அவசியம் என்ற அடிப்படையில் இவ்வாறு பரிந்துரை

செய்யப்பட்டுள்ளதாக, துணை நிலை ஆளுநர் அலுவலகம், செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளது.

*மாற்றுத் திறனாளி*

புதுச்சேரியில் மாற்றுத் திறனாளிகளுக்கான 3 ஆயிரம் ரூபாய் மாதாந்திர உதவித் தொகை, 3 ஆயிரத்து 500 ரூபாயாகவும், 4 ஆயிரத்து 800 ரூபாய் உதவித் தொகை, 5 ஆயிரத்து 500 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும் என முதலமைச்சர் திரு ரங்கசாமி அறிவித்துள்ளார். சமூகநலத் துறை சார்பில் இன்று புதுச்சேரியில் நடைபெற்ற, **சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தின விழாவில்** அவர் பேசுகையில், மாற்றுத் திறனாளிகளின் வாகனங்களுக்கான 25 லிட்டர் பெட்ரோல், 30 லிட்டராக உயர்த்தி வழங்கப்படும் என்றும் 15 கிலோ அரிசிக்கான 600 ரூபாய் பணம், 20 கிலோ அரிசிக்கான 800 ரூபாயாக, வங்கிக் கணக்கில் செலுத்தப்படும் என்றும் கூறினார். பண்டிகைக் காலத்தில் மாற்றுத் திறனாளிக்கு வழங்கப்படும் இலவச துணிக்கான 500 ரூபாய் தொகை, 750 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் அறிவித்தார்.

துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், **மாற்றுத் திறனாளிகள் தின விழாவில்** பேசுகையில், மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு வழங்கும் உதவிகள் அவர்களின் உரிமையே தவிர, சலுகை அல்ல என்றார். மாற்றுத் திறனாளிகள், நம்பிக்கையின் **ஊற்றுக் கண்ணாகவே** திகழ்வதாகக் குறிப்பிட்ட அவர், இதைக் கருத்தில் கொண்டே பிரதமர் திரு நரேந்திர மோடி இவர்களைக் குறிக்க, **திவ்யாங்-ஜன்** என்னும் வார்த்தையை பயன்படுத்துவதாக கூறினார். மாற்றுத் திறனாளிகள் உட்பட அனைவரும் எல்லாத் துறைகளிலும் முன்னேறினால் தான், **முழுமையான வளர்ச்சி** சாத்தியமாகும் என்பதால் எந்த பாகுபாடும் இன்றி அனைவருக்கும் சம வாய்ப்பு வழங்கும் உறுதி மொழியை அனைவரும் ஏற்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார். துணை நிலை ஆளுநர் உரையில் இருந்து ஒரு பகுதி……

(வாய்ஸ்-கைலாஷ்நாதன்)

*காலண்டர்-ரங்கசாமி*

புதுச்சேரியில் எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை மூலம் தயாரிக்கப்பட்டுள்ள 2026-ஆம் ஆண்டிற்கான மாதக் காலண்டரை, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று வெளியிட்டார். சட்டப் பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், வேளாண் அமைச்சர் திரு ஜெயக்குமார், அரசுக் கொறடா திரு ஏ கே டி ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர் திரு லட்சுமி காந்தன் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர். உலக அளவிலான சுற்றுலா தரவரிசையில் 2-ஆம் இடம் பெற்றுள்ள புதுச்சேரியின் பழைமை-புதுமைகளை போற்றும் வகையில், எழில்மிகு புதுச்சேரி நகரின் அன்றைய தோற்றமும், இன்றைய தோற்றமும் அழகிய வண்ணப் படங்களாக இந்நாட்காட்டியில் இடம் பெற்றுள்ளன.

*வானிலை*

வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக, இன்று, தென் தமிழகத்தின் கடலோர மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்கள், மற்றும், காரைக்கால் பகுதிகளின் ஓரிரு இடங்களில், லேசான மழை பெய்யக் கூடும் என்றும், தமிழகத்தின் இதர பகுதிகள் மற்றும் புதுச்சேரியில், வறண்ட வானிலையே நிலவும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நாளை கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்கள் மற்றும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், லேசான மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில், லேசான பனி மூட்டம் காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தின் ஓரிரு இடங்களில், இரவு அல்லது அதிகாலை வேளையில் உறைபனி ஏற்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

*மகளிர் கிரிக்கெட்*

மகளிர் கிரிக்கெட்டில், இந்தியா-இலங்கை அணிகளுக்கு இடையிலான 2-ஆவது 20 ஓவர் போட்டி, விசாகப் பட்டிணத்தில், இன்று மாலை நடைபெற உள்ளது. 5 போட்டிகளைக் கொண்ட இத்தொடரில், தற்போது இந்தியா 1க்கு-பூஜ்யம் என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

*கப்பல்*

மரப் பலகைகளை, ஒன்றுடன் ஒன்று சேர்த்துக் கட்டி, இந்திய கடற்படையால் தயாரிக்கப்பட்டுள்ள, INSV-கவுண்டின்யா கடற்கலம், வரும் 29-ஆம் தேதி, முதலாவது கடற்பயணத்தை மேற்கொள்ள இருக்கிறது. அன்றைய தினம் குஜராத் மாநிலம் போர்பந்தரில் இருந்து புறப்படும் இந்த கப்பல் பண்டைக் காலத்தில் அரபிக் கடலின் குறுக்கே இந்திய கப்பல்கள் பயணித்த அதே பாதையில் ஓமன் தலைநகர் மஸ்கட் வரை, சென்று திரும்பும்.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பொருளாதாரத்தில், முதலீடுகள் மற்றும் வளர்ச்சியைத் தூண்ட, பாதுகாப்பு மிக அவசியம் என்று, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார்.

இந்தியா-நியுசிலாந்து வரியில்லா வர்த்தக ஒப்பந்தம், முற்றிலும் பெண்கள் மட்டுமே அடங்கிய பேச்சுவார்த்தைக் குழுவினரால் இறுதி செய்யப் பட்டுள்ளதை, பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டி உள்ளார்.

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், போலி மருந்து விவகாரம் குறித்து, சிபிஐ மற்றும் என்ஐஏ விசாரணைக்குப் பரிந்துரை செய்துள்ளார்.

புதுச்சேரியில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாதாந்திர உதவித் தொகை உயர்த்தி வழங்கப்படும் என, முதலமைச்சர் திரு ரங்கசாமி அறிவித்துள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

--------------------------------